සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / *All rights Reserved*

மத்துகம கல்வி வலயம்

# இரண்டாம் தவணை பரீட்சை – 2023

| தரம் :- 08 | பாடம் :- குடியியல் | வினாப்பத்திரம் I , II | நேரம் :- 02 மணித்தியாலங்கள் |
|---|---|---|---|

பெயர் :- ..........................................................................................................................

**அறிவுறுத்தல்கள்**

- **1 – 5 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1. மக்களின் வாழ்க்கை தரத்தை பண்புரீதியாக அபிவிருத்தி செய்ய அரசினால் வழங்கப்படுவது.
   1. சுகாதார சேவை ஆகும்
   2. ஊடக சேவையாகும்
   3. பொதுச் சேவையாகும்
   4. பாதுகாப்பு சேவையாகும்

2. **”மனிதனால் உரிமையாக்கிக் கொள்ளப்பட்டுள்ள அறிவு, நம்பிக்கை, கலாசாரம், பழக்க வழக்கம் , வாழ்க்கை முறை முதலிய அனைத்தும் பண்பாடாகும்”** என கூறியவர்?
   1. செனரத் பரணவிதான
   2. J.B திஸாநாயக்க
   3. C.W.W கன்னங்கர
   4. E.B டெய்லர்

3. பல்லின கலாசாரத்தை பின்பற்றுகின்ற நாடுகளில் காணக்கூடிய பண்புகளும் ஒன்றாக அமைவது.
   1. ஒரு இனத்துக்குரியவர்கள் மட்டும் வாழ்வர்
   2. பல்லின மக்கள் வாழ்வார்கள்
   2. ஒரு மொழி மட்டும் பயன்படுத்தப்படும்
   4. ஒரே வகையான கலாசாரம் பின்பற்றப்படும்

4. புவியினுள் நிகழும் பௌதீக செயற்பாடுகள் காரணமாக ஏற்படக்கூடிய இயற்கை அர்த்தங்களுல் ஒன்று.
   1. வரட்சி
   2. வெள்ளப்பெருக்கு
   3. சுனாமி
   4. சூறாவளி

5. விபத்துக்கள் ஏற்படுவதை முழுமையாக தவிர்க்க முடியாதெனினும் அவற்றினால் ஏற்படக்கூடிய சேதங்களை குறைத்துக் கொள்ளலாம். இச்செயற்பாட்டினை எவ்வாறு அழைப்பர்?
   1. அனர்த்தத்தை கட்டுப்படுத்தல்
   2. அனர்த்தத்திற்கு முகம் கொடுத்தல்
   3. அனர்த்த முகாமைத்துவம்
   4. அர்த்தத்தை இல்லாதொழித்தல்

**அடைப்புக்குள் இருந்து பொருத்தமான விடையை தெரிவு செய்து இடைவெளி நிரப்புக**

6. பிள்ளைகள் தமது ............................................ அனுபவிப்பது போல அதற்கு ஏற்ப தமது கடமைகளையும் சரிவர செய்தல் வேண்டும்.

7. ...................................................... கவனமின்மை காரணமாகவும் வீதி விபத்துக்கள் இடம் பெறுகின்றன.

8. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதால் ......................................... குறைவடையும்.

9. .......................................................... சமூகமொன்றில் சகல பிரஜைகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டும்

10. சிறுவர் உரிமைகளை பாதுகாத்து நடைமுறைப்படுத்தும் சர்வதேச அமைப்பாக .................................. விலங்குகின்றது

**( முரண்பாடுகள், உரிமைகள், பாதசாரிகளின், ஜனநாயக, யுனிசெப் )**

**சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளம் இடுக.**

11. இன்று உலகில் பெரும்பாலான நாடுகளில் ஜனநாயக ஆட்சி முறை பின்பற்றப்படுகின்றது. ( )

12. பல்வேறு கலாசார பண்புகளைக் கொண்ட சமூகமே பல்பண்பாட்டு சமூகம் எனப்படும். ( )

13. இலங்கையில் சுனாமி அனர்த்தம் 2014 ஆம் ஆண்டில் ஏற்பட்டு பாரிய சேதத்தை ஏற்படுத்தியது. ( )

14. பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பல காணப்படுகின்றன. ( )

15. ஜப்பான் மக்கள் தங்களுடைய நானாக செயல்பாடுகளை செய்து கொள்வதற்காக துவிச்சக்கர வண்டிகளை பெரிதும் பயன்படுத்துகின்றனர். ( )

**பின்வரும் A, B பகுதிகளை இணைக்குக.**

| | A | B |
|---|---|---|
| 16. | பூச்சிக்கொல்லி பயன்பாடு | வீதி விபத்து |
| 17. | இயற்கை அனர்த்தங்களும் ஒன்று | டெங்கு |
| 18. | மது போதையில் வாகனம் செலுத்துதல் | இரசாயன பொருள் |
| 19. | ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் | சுனாமி |
| 20. | தொற்றா நோய்களுள் ஒன்று | யுனிசெப் |

**(2 x 20 = 40 புள்ளிகள் )**

## பகுதி - 11

**முதலாம் வினா கட்டாயமானது.**
**ஏனைய வினாக்களில் இருந்து நான்கு வினாக்களை தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) 1. இலவச கல்வியின் தந்தை யார்?

2. கல்வி மூலம் ஆற்றப்படும் பணிகள் **இரண்டை** குறிப்பிடுக?

3. பயணிகளின் போக்குவரத்திற்காக சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் **இரண்டை** குறிப்பிடுக?

4. தகவல் பரிமாற்ற சேவை மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் **இரண்டை** குறிப்பிடுக?

5. சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் **இரண்டை** குறிப்பிடுக?

6. குடும்பத்தில் காணப்படும் ஜனநாயக பண்புகள் **இரண்டை** குறிப்பிடுக?

7. சிறுவர் உரிமைகள் **இரண்டை** குறிப்பிடுக?

8. இரசாயன பொருட்கள் உடலினுள் செல்லும் முறைகள் **இரண்டை** குறிப்பிடுக?

**(2 x 8 = 16 புள்ளிகள் )**

02) 1. நாம் பெற்றுக் கொள்ளும் பொதுச் சேவைகள் **இரண்டை** குறிப்பிடுக?

3. பொதுச் சேவையின் பண்புகள் **இரண்டை** குறிப்பிடுக?

3. A - மக்களுக்கு பொதுச் சேவைகள் வழங்கப்படும் முறைகள் மூன்று காணப்படுகின்றன. அவ் **மூன்று** முறைகளையும் குறிப்பிடுக?

B - பிரித்தானியர் ஆட்சியின் போது இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட சேவைகள் **இரண்டை** குறிப்பிடுக?

**(2 +4+ 5 = 11 புள்ளிகள் )**

03) 1. மேலைத்தேய வைத்திய முறையின் கீழ் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகள் **இரண்டை** குறிப்பிடுக.?

2. தொற்றா நோய்கள் **நான்கினை** குறிப்பிடுக?

3. சுகாதார சேவையின் செயற்பாடுகள் **ஐந்திணை** குறிப்பிடுக?

**(2 +4+ 5 = 11 புள்ளிகள் )**

04) 1. இலங்கையில் சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் நிறுவனங்கள் **இரண்டை** குறிப்பிடுக?

2. சிறுவர் உரிமைகள் நான்கு பிரதான தலைப்புகளின் கீழ் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை குறிப்பிடுக?

3. சிறுவர் கடமைகள் **ஐந்திணை** குறிப்பிடுக?

**(2 +4+ 5 = 11 புள்ளிகள் )**

05) 1. பாடசாலையில் தலைமைத்துவத்தை மேற்கொள்ளும் நபர்கள் **இருவரை** குறிப்பிடுக?

2. தலைவர்களிடம் காணக்கூடிய பண்புகள் **நான்கினை** குறிப்பிடுக?

5. தலைவர் ஒருவரின் அவசியம் குறித்து அனேக காரணங்கள் உள்ளன. அவற்றுள் **ஐந்திணை** குறிப்பிடுக?

**(2 +4+ 5 = 11 புள்ளிகள் )**

06) 1. பல்பண்ட்பாட்டு கலாசாரத்தை பின்பற்றுகின்ற நாடுகள் **இரண்டை** குறிப்பிடுக?

2. பல்பண்பாட்டு சமூகத்தில் காணக்கூடிய பண்புகள் **நான்கினை** குறிப்பிடுக?

3. பல்கலாசார சமூகத்தில் நாம் வாழ்வதனால் நம்மில் வளர்த்துக் கொள்ளக்கூடிய நற்பண்புகள் **ஐந்தினை** குறிப்பிடுக?

**(2 +4+ 5 = 11 புள்ளிகள் )**

07) 1. காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தங்கள் **இரண்டினை** குறிப்பிடுக?

2. அனர்த்த நிலைமைகளின் போது உதவும் அரச நிறுவனங்கள் **நான்கினை** குறிப்பிடுக?

3. இயற்கை அனர்த்தங்களை குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் **ஐந்தினை** குறிப்பிடுக?

**(2 +4+ 5 = 11 புள்ளிகள் )**


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න